# நாட்டைவிட்டு வெளியேறும்படி பத்திரிகை நிருபருக்கு உத்தரவு


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 68

யாழ்ப்பாணம் சித்திரை 8 ஸபர் 24 புதன்கிழமை (21-4-71)


### தவறான செய்தி வெளியிட்டதாக குற்றச்சாட்டு

கோட்டை, புதன்

தவறான செய்தி ஒன்றை வெளியிட்டது சம்பந்தமாக பத்திரிகையாளர் ஒருவரை நாட்டைவிட்டு வெளியேறும்படி பாதுகாப்பு அமைச்சு நேற்று உத்தரவிட்டுள்ளது.

'அசோஸியேட்டட்' பிரெஸ் ஏஜென்ஸியை சேர்ந்த திரு ரேச் மொரம் புலனே நாட்டைவிட்டு வெளியேறும்படி அரசாங்கம் உத்தரவிட்டது.

வெளிநாட்டுக்கு பொய்ச் செய்தியொன்றை அனுப்பியதாக இவர்மீது குற்றம் சாட்டப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறும்படி இவருக்கு உத்தரவிடப்பட்டது.

## இன்று காலை மேயர் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் தெரிவு இன்று காலை 10-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

# அறநாயக்கா பகுதியை ஆயுதப்படை மீட்டது

## நேற்றிரவு எந்தபகுதியிலும் தாக்குதல் இல்லை

கோட்டை, புதன்

கேகாலை மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் கைவசமிருந்த அறநாயக்கா என்னுமிடத்தை மீண்டும் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக ஆயுதப்படை அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார். அறநாயக்கா பொலிஸ் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. பயங்கரவாதிகளினால் மூடப்பட்டிருந்த அறநாயக்கா ஆஸ்பத்திரியும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு நாட்டின் எப்பகுதியிலும் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் இடம்பெறவில்லை என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு அறிவித்தது. ஒருசில மறைவிடங்களில் அணிசேர்ந்திருக்கும் பயங்கரவாதிகள் உணவு, ஆயுதங்கள் பற்றாக்குறை காரணமாக உணவுக் களஞ்சியங்களைக் கொள்ளையடித்து வருவதுடன், பொதுமக்களுக்குத் துன்பம் விளைவித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

### அரிசி மூடைகள் கொள்ளை

மொனறாகலையில் 102 அரிசி மூடைகளுடன் வந்து கொண்டிருந்த லொறி ஒன்று நேற்று பயங்கரவாதிகளினால் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு நேரம் மேலும் தளர்த்தப்பட்டுள்ளது. இன்று முதல் மாலை 6-30 மணி முதல் காலை 5-30 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும். ஊரடங்குச் சட்டத்தின் மாற்றத்துக்கமைய அரசாங்கக் காரியாலய நேரங்களிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. காலை 8 மணி முதல் மாலை 3-30 மணிவரை அவை செயற்படுமென்று அறிவிக்கப்பட்டுளது. இம்மாற்றத்துக்கமைய ரயில், பஸ் சேவை நேரங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தனியார் ஸ்தாபனங்களிலும் இதற்கமைய வேலை நேரங்களை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும் என்றும் அரசாங்கம் அறிவித்தது.

பொதுஜனங்கள், பயங்கரவாதிகள் சம்பந்தமான பல தகவல்களை அரசாங்கத்துக்கு தெரிவித்து வருவதாகவும் பல ஸ்தாபனங்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்கி வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

## காங்கேசன்துறைமுகத்தில் 11,000தொன்மாஇறக்குமதி

மாவிட்டபுரம், செவ்வாய்

காங்கேசன்துறைக்கு வந்துள்ள மாக்கப்பலில் இருந்து மா இறக்கும் வேலை மிகத் துரிதமாக நடைபெற்றுவருகிறது. பலமாதங்களுக்குப் பின் இவ்வருடத்தில் இங்கு வந்துள்ள மாக்கப்பல் இதுவாகும்.

11000 தொன் மாவை ஏற்றிக்கொண்டு அவுஸ்திரேலியாவிலிருந்து வந்துள்ள இக்கப்பலில் இருந்துமாவை இறக்கும் வேலையில் சுமார் 200 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வடமாகாண கூட்டுறவு துறைமுக சேவை சங்கத்தின் சமாசத்தினால் கப்பலிலிருந்து மாவை இறக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு முன் இங்கு வந்து சேர்ந்த சீன அரிசிக் கப்பல் ஒன்றில் இருந்தும் இறக்குமதி வேலைகள் நடைபெற்று வருகின்றன,

அகில இலங்கைப் போட்டியில்

## வீரர் சிவநாதனுக்கு 2 தங்கப்பதக்கங்கள்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கைபாடசாலை மாணவர்களுக்கிடையில் அண்மையில் கண்டியில் நடைபெற்ற கீழ்ப்பிரிவு மெய்வல்லுநர் போட்டியில் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர் ரி. சிவநாதன் இருதங்கப் பதக்கங்களைப் பெற்று ஒரு சாதனையை ஏற்படுத்தினார்.

அ. இ. பாடசாலை மெய்வல்லுநர் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த வீரர்கள் வெற்றி பெற்றுத் தங்கப்பதக்கத்தைப் பெற்றது இதுவே முதற்தடவையாகும். வீரர் ரி சிவநாதன் இப்போட்டியில் நீளம் பாய்தலிலும், 2-வது இடத்தைப் பெற்று ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் தட்டிக் கொண்டார். (தே. நி.)

யாழ். நகரில்

## பதுக்கல் வேட்டையில் இராணுவத்தினர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் கடைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இராணுவத்தினரால் வெளியில் கொண்டுவரப்பட்டு பொதுமக்களுக்குக் கட்டுப்பாட்டு விலைக்கு நேற்று விற்பனை செய்யப்பட்டன

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வியாபார ஸ்தாபனமொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த இரண்டு மூடை சீனியையும் இராணுவத்தினர் வெளியில் கொண்டுவந்து ஒருவருக்கு அரை றாத்தல் வீதம் விற்பனைசெய்தனர்.

சின்னக்கடை, சுன்னாகம், கல்வியங்காடு மற்றும் பல இடங்களிலும் இராணுவத்தினர் பதுக்கல் பொருட்களை வெளியில் கொண்டு வந்து கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்தனர்.

ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், காங்கேசன்துறை ஆகிய இடங்களிலும் இராணுவத்தினர் பதுக்கப்பட்ட உணவுப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடவிருக்கின்றனர்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்கிவைத்திருக்கும் வர்த்தகர்கள் பற்றி உடனடியாகத் தகவல்கள் தரும்படி அரசாங்க அதிபர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மா, சீனி, வெங்காயம், மண்ணெண்ணை பல இடங்களில் பதுக்கிவைக்கப்பட்டிருப்பதாகப் பொதுமக்கள் புகார்செய்ததைத் தொடர்ந்தே இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### ஊரடங்கு நேரம்

இன்று மாலை
6-30
மணி முதல்
நாளை காலை
5-30
மணி வரை

## கம்போடியா பிரதமர் ராஜினாமா

நாம்பொன் ஏப் 20

கம்பொடிய மந்திரிசபை இன்று கலைக்கப்பட்டுள்ளது. கம்பொடிய பிரதமர் ஜெனரல் ஜான்னால் தமது பிரதமர் பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்தே மேற்படி சபை கலைக்கப்பட்டது.

பிரதமர் ஜெனரல் ஜான்னால் கடந்த இரு மாதங்களாக பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார். அவரது உடல்நிலை காரணமாகவே அவர் பதவியை துறந்தார்.

## வெளிநாடு செல்வோருக்கு நிபந்தனை

கோட்டை, புதன்

இலங்கையிலிருந்து வெளிநாடு செல்லவிருக்கும் எந்தவொரு நபரும் வெளிநாடு செல்வதற்கு 2 வாரங்களுக்கு முன்னர் குடிவரவு குடியகல்வு அதிகாரிக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றபின்பே வெளிநாடு செல்லமுடியும் என்று நேற்று அரசாங்கம் அறிவித்தது. இவ்விதம் அனுமதி பெறாதவர்கள் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விருப்பனுக்கு

ஆயர்பாடி சோதிடர் தரும் இராசிப்பலன் வெளிவந்துவிட்டன. உங்களின் அரிய துணைவன் இன்றே உங்களின் இராசிக்குரிய புத்தகம் ஒன்று ரூபா 1-20 கொடுத்து வாங்குங்கள். இதில் உங்களுக்குவேண்டிய சகல நன்மைகளும் வழிவகைகளும் தந்துள்ளனர். வே. த. மயில்வாகனம், ஆயர்பாடி சோதிடநிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 2763

### தவறிவிட்டது

22 ஸ்ரீ 8065 டிராக்ரர் பதிவுபுத்தகம், இன்சூரன்ஸ், ஜி சிதம்பரநாதனுடைய லைசென்ஸ் ஆகியன வண்ணை சிவன்கோவலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 2764

### சமயக்கருத்தரங்கு

தாவடி, செவ்

"பகுத்தறிந்து வாழும் தன்மையையுடையவன் தான் மனிதன் எதையும் பகுத்து அறிவால் உணரும் ஆற்றல் பொருந்தியவன் மனித னொருவனே உயிர்க்கொலையாதியாம் பாதகங்களை மனதாலும் எண்ணாதவனே எல்லா உயிரும்தொழும் என்கிறார் வள்ளுவர்" என கொக்குவில் கூட்டுப்பிரார்த்தனைச் சபையில் நடந்த சமயக்கருத்தரங்கில் கலந்துரையாற்றிய தாவடிசைவ இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த திரு. எஸ். கனகநாயகம் கூறினார்.

## பாகுபாடற்ற சமூக சேவை

கோட்டை, செவ்

எந்தவித பாகுபாடுமின்றி நான் மக்களுக்குச் சேவையாற்றுவேன், சமூக சேவைகள் அமைச்சு சமூகசேவைகளை வேறுபாடற்றமுறையில் பட்சபாதமின்றி செய்யும் இவ்விலாகா எனது சொந்தச் சொத்தல்ல மக்களது சொத்தாகும்.

காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய சமூகசேவைகள் அமைச்சர் திரு. ரி பி. தென்னகோன் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கவீனப் பிள்ளைகளுக்காக அமைக்கப்பட்ட சம்போதி நிலையத்தின் 6-வது ஆண்டு கூட்டத்தில் அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; அரசாங்கம் காலத்துக்குக் காலம் மேற்படி பிள்ளைகளின் நலனுக்காக வேண்டிய சேவையைச் செய்து வருகிறது. இப்பிள்ளைகளது நலனுக்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பொதுமக்களும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்.

காலிமேயர் டபிள்யு. ரி. விஜேகுலசூரியா அக்மீமன ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு சேனபாலசமரசேகரா உட்படப்பலர் உரையாற்றினர்.

## உணவுப் பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை

கோட்டை செவ்

நாடுபூராவிலுமுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்களைத் தடையின்றி விநியோகம் செய்வதற்காக உணவு இலாகா பங்கீட்டரிசிப் புத்தகங்களுக்கு அடுத்த மாதம் விநியோகிக்கத்தக்கவகையில் உணவுப் பொருட்களை மாகாணங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அரிசி, சீனி மா, மிளகாய் ஆகியவற்றை விட போதியளவு கருவாடு, பருப்பு வகைகள், வெங்காயம் உருளைக்கிழங்கு ஆகியவற்றையும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் நாட்டிலுள்ள அதன் சகல கிளை ஸ்தாபனங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

—...

## விவசாயிகள் கவலை

பாண்டிருப்பு, செவ்

கல்முனைப் பகுதி விவசாய நிலங்களில் 'சல்வீனியா' என அழைக்கப்படும் தாவர இனத்தைச்சேர்ந்த பூண்டுகள் பரவி விவசாயிகளுக்குக் கவலையையும் கஷ்டத்தையும் அளித்துள்ளன. இவற்றை அகற்றுவதற்கு விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியுற்றுள்ளதாகவும் புதிய போக நெல் விதைப்புக்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளை இது கவலைதருவதாயுள்ளதாயும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## இலங்கையில் தெலுங்கு புதுவருடதினம்

கொழும்பு, செவ்

ஆந்திரா கலாச்சார சங்க உறுப்பினர்கள் விரோதிகிருது தெலுங்கு புதுவருடத்தை மார்ச் மாதம் 27ம் திகதி கொள்ளுப்பிட்டியிலுள்ள நட்புறவுச்சங்க மண்டபத்தில் கோலாகலமாகக் கொண்டாடினர். இலங்கையிலுள்ள தெலுங்கு மொழி பேசும் ஏராளமான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

திருமதி இன்னாசித்தம்பியினதும், அவரது புதல்வியினதும் தேவார ஆராதனையுடன் ஆரம்பமான இவ்விழாவுக்கு திரு ஏ எம் ராஜ் தலைமைவகித்தார். திரு ராஜ் கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:

தெலுங்குமொழியும், இனமும் இலங்கைக்கு புதிதல்ல. இலங்கையை அரசாண்ட பல மன்னர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் தெலுங்கு இனத்தைச்சேர்ந்தவர்கள் என்று சரித்திரம் கூறுகிறது. முன்னாள் கண்டிய அரசன் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் ஒரு தெலுங்கு குடும்பத்தைச் சேர்ந்தவர் மன்னராட்சிக்காலத்தில் தெலுங்குமொழி இலங்கை நீதிபரிபாலனத்தில் முக்கிய இடம்பெற்றுள்ளது

கண்டி மாவட்டத்தில் பல காணிகளின் உறுதிகளும், பல அரசாங்க தஸ்தாவேஜுகளும் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. இவற்றைய இன்றைய நாட்களில்கூடக் காணமுடியும். தெலுங்கு மொழிக்கும் சிங்கள மொழிக்குமிடையில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. இந்த இரண்டு மொழிகளும் பாளி மொழியில் இருந்துவந்தவை.

தெலுங்கு மொழியினதும் தெலுங்கு கலாச்சாரத்தினதும் சிறப்பை இலங்கை மக்களுக்கு எடுத்து விளக்குவதே எமது சங்கத்தின் நோக்கமாகும்.

## இலங்கையில் சர்வதேச விஞ்ஞானநிலையம்

கோட்டை, செவ்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விஞ்ஞானக்கைத்தொழில் அபிவிருத்திக்கு உழைப்பதற்காக இலங்கையில் சர்வதேச விஞ்ஞான ஸ்தாபனம் ஒன்று அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

சர்வதேச நிதி ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இந்நிறுவனத்தை இங்கு ஸ்தாபிப்பது சம்பந்தமாக மிகவிரைவில் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த 21 பௌதிக இயலாளர்கள் இலங்கை வரவிருக்கிறார்கள் இந்த ஸ்தாபனத்துக்கான சகல உதவிகளையும் யுனெஸ்கோ செய்யும்.

## வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்

111. பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்தினால் கீழ்க் குறிக்கப்படும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பெற்றோல் விற்பனவு நிலைய முகாமையாளர்
தகைமைகள்:
(அ) வயது: 25 வயதிற்கும் 50வயதிற்கும் உட்பட்டவராகவும்,
(ஆ) கல்வி: க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் சித்தி அல்லது ஜே எஸ். ஸி. தராதரப் பத்திரத்துடன் பெற்றோல் விற்பனவு நிலைய முகாமையாளராக குறைந்தது ஐந்து வருட அனுபவம்.
(இ) வேதனம்:
ரூபா. 250/- 350/-
10 X 10
எல்லாப்படிகளும் உட்பட
(ஈ) பிணை: ஆதனப் பிணை ரூபா 10,000/- ரொக்கப்பிணை ரூபா 2,500/-

2. விற்பனையாளர்கள்:
தகைமைகள்
(அ) வயது: 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராகவும்.
(ஆ) கல்வி: ஜே. எஸ். ஸி. பரீட்சையில் சித்தி.
(இ) வேதனம்:
ரூபா. 125/- 200/-
15 x 5
எல்லாப்படிகளும்உட்பட
(ஈ பிணை: ரொக்கப்பிணை ரூபா 250/-

3. இராக் காவலாளர்.
தகைமைகள்.
(அ) வயது: 25 வயதிற்கும் 55 வயதிற்கும் உட்பட்டவராகவும்,
(ஆ) கல்வி: 7-ம் வகுப்பில் சித்தி
(இ) அனுபவம்: பொலிஸ் அல்லது இராணுவ ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் விரும்பத் தக்கது.
(ஈ) வேதனம்: எல்லாப் படிகளும்உட்பட ரூபா125/-
(உ) பிணை: ரொக்கப் பிணை ரூபா 500/-.

X தற்போதைய சூழ்நிலையை முன்னிட்டு மேற்படி விண்ணப்பங்களின்முடிவு திகதி 25-4-71 வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் தபால் மூலமோ அல்லது நேரிலோ 25-4-71 பகல் 12 00 மணிக்குமுன்னர் மேற்படி சமாசத்திற்கிடைக்கச் செய்ய வேண்டும்.

குறிப்பு: முன் மனுப்பண்ணியவர்கள் மீண்டும் மனுப்பண்ணத் தேவையில்லை.

3249 தலைவர்

## குருபூசை

யாழ்ப்பாணம், புதன்

இன்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் அப்பர் சுவாமிகள் குருபூசைநடைபெறவுள்ளது. ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் 'அப்பர் காட்டிய அருள் நெறி' என்னும் பொருள் பற்றி இன்னிசை விரிவுரையொன்றும் நடத்தவுள்ளார்.

## மரண அறிவித்தல்

### நன்னித்தம்பி அப்புத்துரை

உடுவில் இராசம் அவர்களின் அருமைக் கணவரும் ஸாம்பியா பிரதமநீதியரசர் நித்தியானந்தன் கொழும்பு அருளானந்தன், உடுவில் திருமதி த. இரத்தினசபாபதி திருமதி. செ சுப்பிரமணியம், எதியோப்பியா கல்வி அதிகாரி கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்றபரமநாதன், களுவாஞ்சிக்குடி கிராமபயிர்செய்கைஉத்தியோகத்தர் பதமநாதன் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற திரு. ம. இரத்தினசபாபதி, காங்கேசந்துறை நடேஸ்வராகல்லூரி ஆசிரியர் மு. சுப்பிரமணியம் ஆகியோரின் அருமை மாமனுரும், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை ஆசிரியை செல்வி. இ. சரோஜா, சகுந்தலா, சயித் ஆகியோரின் அருமைப் பேரனுமாகிய திரு நன்னித்தம்பி அப்புத்துரை மலாயன் பென்சனியர் (O. A.) 19-4-71-ல் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமைச்சடங்குகள் 20-4-71 பி. ப. 2 மணியளவில் உடுவிலில் நடைபெற்றது. அறிவிப்பவர்:- அ. பத்மநாதன் 'டைப்பிங் வாசா' உடுவில், சுன்னாகம். 3248


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00, பி.ப.1-30
சிவாஜி கணேஷன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
மறு அறிவித்தல் வரை தினசரி காலை 10-00 பி. ப 1. 15
மாஸ்ரர் பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
வா ராஜா வா

5-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30 பி.ப.1-30
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
மனோகர், அசோகன், ஆனந்தன்
நாகேஷ், சுந்தரராஜன்
நடித்த
விநாயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(மர்மச்சித்திரம்)

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
காலை 10-30, பி.ப 2-00
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி நடித்த
கலங்கரை விளக்கம்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி10-00, 1-30மட்டும்
நாகேஷ் - கே. ஆர். விஜயா நடித்த
சர்வர் சுந்தரம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
அன்பளிப்பு

ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10 30 பி ப 1-30
ரவிச்சந்திரன் - பாரதி நடித்த
தங்கத்தம்பி

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME
தினசரி பி. ப. 1-30
சிவாஜி-சௌகார் ஜானகி நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

REGAL - Jaffna
Daily10-15a.m. 1-30 p.m.
Fernando Sancho
in
OUR AGENT FLIT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபுக் கூட்டரசில் சூடானும் சேர்ந்து கொள்ளும்

கெய்ரோ, ஏப்ரல் 20 எகிப்து, சிரியா, லிபியா ஆகிய அரபுநாடுகள் ஏற்படுத்திக்கொள்ளவிருக்கும் அரபு குடியரசுகளின் கூட்டமைப்பில் சூடானும் சேர்ந்து கொள்ளவிருப்பதாக இப்பொழுது அறியப்படுகின்றது.

இந்தக் கூட்டமைப்பு சம்பந்தமான பெங்காஸி பேச்சுவார்த்தைகளில் முன்னர் சூடான் கலந்துகொள்ளவில்லை. கெய்ரோவில் நடைபெற்ற அரபுத்தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொண்ட பின் சூடான் அதிபர் நிமேரி மாஸ்கோவுக்குச் சென்றார். ஆனால் சிரியா, லிபியா, எகிப்து ஆகிய நாடுகளின் அதிபர்கள் பெங்காஸியில் கூடி ஆலோசனைகள் நடத்தி இஸ்ரேலுக்கு எதிரான தங்கள் எதிர்ப்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன் அரபுக் கூட்டுஅரசொன்றைஅமைத்துக்கொள்வதென்று முடிவு செய்தனர்.

இந்த கூட்டு அமைப்பில் சேர்ந்து கொள்ளப்போவதாகசூடானும் இப்பொழுது முடிவுசெய்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது.

இதற்கான அரசியல் சட்ட மாற்றங்களை உள்நாட்டில் முதலில் ஏற்படுத்திக் கொண்ட பின்னர் சூடான் முறைப்படி இந்தக் கூட்டரசில் சேர்ந்து கொள்ளும் என்று தெரிகின்றது

அரபு நாடுகளின் இந்தக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள ஒரு சிக்கல்பற்றிய குகிரமான செய்தியொன்றும் இப்பொழுது கிடைத்திருக்கின்றது. இச்செய்தி லிபியா சம்பந்தப்பட்டதாகும்.

லிபியா பிரான்ஸிடம் 100 மிராஜ் ஜெட் விமானங்களுக்கு ஓடர் கொடுத்திருக்கின்றது. இந்த விமானங்களை வேறு நாடுகளுக்கு கொடுத்துதவக் கூடாதென்பது நிபந்தனை. ஆனால் புதிய அரபுக்குடியரசின் கொள்கைப்படி அங்கத்துவநாடுகள் தங்களுக்குஅ ஆயுதங்களைப் பகிர்ந்துகொள்ளமுடியும். இதன்படிக்கு பிரஞ்சு மிராஜ் ஜெட்டுகள் இஸ்ரேலுக்கு எதிராகவும் பாவிக்கப்படலாம்.

இந்த விமானங்கள் நிபந்தனைக்கு மாறுகப்பாவிக்கப்படுமானுல் அவைகளை பிரான்ஸ் சப்ளை செய்வதை நிறுத்திவிடும் என்று பிரஞ்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பி. பி. ஸி. யில் பயிற்சி பெறுகிறார்

கொழும்பு, செவ்

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின்உதவிப் பயிற்சி அதிபரான திரு. சி வீ. ராஜசுந்தரம் பிரிட்டனில் பிரிட்டிஷ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் மூன்றுமாதப் பயிற்சியை மேற்கொண்டு வருகிறார்.

இம்மாதம் 13ம் திகதி பிரிட்டன் வந்து சேர்ந்த திரு. ராஜசுந்தரம் பி.பி.ஸி. பயிற்சித் திட்டத்தின் சகல அம்சங்களைப் பற்றியும் படித்தறிந்து வருகிருர். கொழும்புத் திட்ட உபகார நிதித் திட்டத்தின் கீழ் இவரது பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## மேற்கு ஆசியா: யுதாண்ட்கருத்து

வாஷிங்டன், ஏப் 20 மேற்காசிய அமைதிப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பமானுல் அல்லாமல் அங்கு நிரந்தரமான அமைதியை ஏற்படுத்துவது முடியாத காரியமென ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்ட் கூறியுள்ளார்.

## விமானக் கடத்தல்காரர்களை கண்டுபிடிக்க நவீனசாதனம்

லண்டன், ஏப். 20 ஆகாயத்தில் விமானம் பறந்துகொண்டிருக்கும் சமயம், துப்பாக்கி முனையில் பிரயாணிகளைப் பயமுறுத்தி விமானியின் கூட்டிற்குள் சென்று விமானத்தை வேற்றிடத்துக்குத் திசை திருப்புமாறு பயமுறுத்துவதும். விமானிகள் மறுப்புத்தெரிவித்தால் உடனே துப்பாக்கியால் சுட்டோ அல்லது கைவெடிகுண்டுகளை வீசி விமானத்தையே முழுமையாக அழிப்பதும் போன்ற அசம்பாவிதங்கள் ஆகாய வெளியில் இடம்பெருமல் தவிர்க்கும் வண்ணம் பல விமானக் கம்பனிகள் இப்பொழுது தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. லண்டன் விமான நிலையத்தில் பி. ஓ. ஏ ஸி. கம்பனி தன் விமானங்களில் பிரயாணிகள் ஏறமுன், அவர்களைப் பரிசோதனை செய்யாமலே அவர்கள் ஏதாவது உலோகப் பொருட்கள் அல்லது கைத்துப்பாக்கிகள், கத்திகள் போன்றவற்றைக் கொண்டு செல்கிருர்களா என்று கண்டுபிடிக்க ஒரு புரட்சிகரமான சாதனத்தை நிறுவியிருக்கிறது.

பிரயாணிகள் சுங்கப்பகுதியைத் தாண்டி, விமானத்திற்குள் ஏறமுன் இருக்கும் வாசலருகில் இச்சாதனம் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆயுதங்களைக் களவாகக் கொண்டுசெல்லும் பிரயாணி ஒருவர் இவ்வாசலருகில் வந்ததும், இச்சாதனம் தன் சிறு திரையில் அபாயச் சைகை காட்டி அப்பிரயாணியின் உடம்பின் எப்பகுதியில் அப்பொருள் மறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பதிவு செய்துகாட்டிவிடுகிறது. இப்படிப்பட்ட அற்புதசாதனங்களை இப்பொழுது பிரிட்டன் விமானநிலையங்களில் வெற்றிகரமாகப் பாவித்துவருகிறது.

ஆனால் உலோகச்சேர்க்கையே இல்லாமல் தயாரிக்கும் வெடிகுண்டுகளையும் கண்டுபிடிக்க வேருெரு முறையும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. எல்லா வெடிகுண்டுகளிலும் குறிப்பிட்ட அளவு வாயு கலக்கப்பட்டிருப்பதால் இந்த வாயுவை மோப்பம் பிடித்து 'மணந்து' கண்டு கொள்ள ஒரு செயற்கை 'மூக்கு' ஒன்று உருவாக்கப் பட்டிருக்கிறது. விமானத்தில் சகல பிரயாணிகளும் ஏறியவுடன் விமானக்கதவு இறுகப் பூட்டப்பட்டவுடன் இந்தச் செயற்கை 'மூக்கு' தன் வேலையைச் செய்ய ஆரம்பித்துவிடுகிறது. வெடிகுண்டுகளில் கலக்கப்பட்டிருக்கும்விசேஷ வாயுவைஇம் மூக்கு 'மணந்து' கண்டுபிடித்து உடனே அதனை விமானிக்கு அறிவித்து விமானத்தை உடனடியாக நிறுத்திவிடுகிறது.

# பாக். படையை பாரத ராணுவம் தாக்கியதாம்

புதுடில்லி, ஏப் 20 பாகிஸ்தான் எல்லைக் காவல் படையின் மீது இந்திய ராணுவம் தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இந்தக் குற்றச்சாட்டு பற்றிய குறிப்புகள் இஸ்லாமாபாத்திலுள்ள இந்தியத் தூதரிடம் கையளிக்கப்பட்டது. ஆனுல் இந்திய அரசிடமிருந்து இதுபற்றி எதுவித கருத்தும் வெளியாகவில்லை. கொமில்லாவுக்கும், பிரம்மன்பாரியாவுக்கு மிடையில் இந்தத் தாக்குதலை இந்தியப் படைகள் நடத்தினராம்.

ஷேக்முஜிபுர்ரஹ்மான் ஆதரவுபடைகள் வசமிருந்த பகுதிகளை பாகிஸ்தான் ராணுவம் தொடர்ந்து கைப்பற்றி வருவதாக பாகிஸ்தான் வானெலி அறிவித்தது.

ஆனுல் புதுடில்லிக்கு கிடைக்கும் வேறு செய்திகளின்படி பலமுனைகளில் ஷேக்கின் விடுதலைப் படையினர் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிருர்கள் என்று தெரிகின்றது.

காஸ்பா என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த ராணுவத்தின் தற்காலிக தலைமையகம் தாக்கப்பட்டு விட்டதாம், அங்கிருந்த துருப்பினர் பலரும் கொல்லப்பட்டார்களாம். டாக்காவிலிருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காலிகஞ்ச் என்ற இடத்தில் நடந்த மோதலில் கடும் ஆட்சேதம் ஏற்பட்டதாக கூறப்பட்டது. ஆக்கூராவில் சில பகுதிகளில் விடுதலைப்படையினர் வெற்றிபெற்றுள்ளனராம் பிரம்மான்பாரியாவுக்குச் செல்ல ராணுவத்தினர் எடுத்த முயற்சிகள் குலைக்கப்பட்டனவாம்.

ராணுவத்திடமிருந்து சில விமானங்களையும்ஏராளமான தோட்டாக்கள், துப்பாக்கிகள் போன்றவற்றையும் விடுதலைப்படையினர் கைப்பற்றியுள்ளார்களாம்.

கிழக்குப்பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக சுமார் 2 லட்சம் அகதிகள் மேற்கு வங்காளத்துக்கு வந்திருக்கிருர்கள் என்று சொல்லப்படுகிறது.

— —

## பதிவுகாரர் பதவி

உடுப்பிட்டி, செவ்

பருத்தித்துறைப் பகுதிக்கான பிறப்பு, இறப்புப் பதிவுகாரர் பதவிக்கும், வடமராட்சிப் பகுதிக்கான திருமணப்பதிவுகாரர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான முடிவு திகதி அடுத்த மாதம் 16ம் திகதியாகும்

## புகையிலையற்ற புதுமையான சிகரட்டுகள்

லண்டன், ஏப். 20 புகையிலை கலக்கப்படாத புதுரகமான சிகரட்டுகள் இப்பொழுது பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 'கோர்ட்டோல்ஸ்' எனப்படும் பிரபல பிரிட்டிஷ் வர்த்தக நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வுகூட விஞ்ஞானிகள் இந்தக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர்.

இந்தப் புதுவகையான சிகரட்டுகள் இப்பொழுது சுகாதார அதிகாரிகளின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் இதனைப் பாவிப்பதற்கு அதிகாரம் வழங்கியவுடன் சந்தைக்கு கொண்டுவரப்படுமெனவும் இந்தக் கம்பனி அதிகாரி ஒருவர் கூறினர்.

ஒருவகை மரத்தூளைப் பதப்படுத்தி, ரசாயன சேர்மானங்களைக் கலந்து இந்த சிகரட்டுகள் தயாரிக்கப்படுகின்றன, இந்த ரசாயனக் கலவையும் பதப்படுத்தும் முறையும் வர்த்தக நோக்கத்திற்காக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. இந்த சிகரட்டுகளைத் தயாரிப்பதற்கென இக்கம்பனி இயந்திரப் பொறியொன்றையும் உருவாக்கியுள்ளது

மணத்திலும் குணத்திலும் மற்றெல்லா வகையிலும் சாதாரண புகையிலை சிகரட்டுகளை விட இவை சிறந்து விளங்குவதாகவும் இவற்றைச் சுவைத்துப் பார்த்தவர்கள் பெரும் திருப்தி தெரிவிப்பதாகவும் இக்கம்பனி அதிகாரிகள் கூறினர்.

## பிரிட்டிஷ் ஆசிரியர்கள் பயிற்சி வகுப்புகள் நடத்துவர்

லண்டன், ஏப். 20 150க்கும் அதிகமான பிரிட்டிஷ் விரிவுரையாளர்களும் போதனுசிரியர்களும் தமது கோடைக்கால விடுமுறையின்போது இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பலவற்றில் ஆசிரிய பயிற்சி வகுப்புகளை நடத்துவார்கள். இப்பயிற்சி வகுப்புகள் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சுமார் நான்கு வாரங்கள் வரை நடைபெறும்.

ஆசிரிய போதனு வகுப்புகளை நடத்துவதற்கென ஆறு பிரிட்டிஷ் கல்விமான்கள் இலங்கை வரவிருக்கின்றனர். அங்கிலியா சர்வகலாசாலை இரசாயன போதனு பீடத் தலைவரான டாக்டர் ஆர். எவ். கெம்பா, செல்ஸா விஞ்ஞானத் தொழில் நுட்பக் கல்லூரியின் இரசாயன விரிவுரையாளரான டாக்டர் ஜே. ஹரிஸ், லிசெஸ்டர் சர்வகலாசாலையின் கணித விரிவுரையாளரான திரு. ஜோன் ஜெஸன், லண்டன் நகர கல்லூரியைச் சேர்ந்த போதனுசிரியர்களான திரு. எஸ். எச். பாங்ஸ், திரு. ஜே. கேட், ரோயல் பெல்பாஸ்ட் கல்வி நிலையத்தின் தலைமையாசிரியரான திரு. சி. பிலிப்ஸ் ஆகியோரே இக்கல்விமான்களாவர்.

கல்வித்துறையில் நல்ல பயிற்சியும், கல்வி புகட்டும் முறையில் பாண்டித்தியமும் பெற்ற இவ்வாசிரியர்கள் இங்கு நடைபெறவிருக்கும் பயிற்சி வகுப்புகளின்போது கல்வி போதிக்கும் நவீன உத்திகள் பற்றியும் பாடத்திட்ட அபிவிருத்திகள் பற்றியும் இலங்கை ஆசிரியர்களுக்கு எடுத்து விளக்குவர்.

கடந்த 11 வருடகாலமாக நடைபெற்றுவரும் இந்த விழுமுறைகாலப் பயிற்சித் திட்டம் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாக

(4-ம் பக்கம் பார்க்க)


'சோவியத் நாடு'

★ சோவியத்-ஈழத்து மக்களின் நப்புறவின் குரல் "சோவியத் நாடு"

'சோவியத்நாடு' வாசியுங்கள்

★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



'சோவியத்நாடு' வாசியுங்கள்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!-

தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்,

27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு-7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தெய்வ சாந்நித்யம் இன்றி வாழ்க்கைக்கு பொருளில்லை; எல்லா சாந்திக்கும், எல்லா ஆனந்தத்திற்கும், எல்லா பாதுகாப்பிற்கும் மூலாதாரமான இந்த சாந்நித்யத்தை உன்னுள் உணர்வாயேல் உன்னுடைய கஷ்டங்கள் அனைத்தும் மறைந்துபோம்.

— ஸ்ரீ அன்னை.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம் 8-ந் திகதி (21-4-71)


## அத்தியாவசியப் பொருள்களும் மக்களும்

அத்தியாவசியப் பொருள்களுக்கு நம் நாட்டில் ஏற்கனவே தட்டுப்பாடு இருந்துவந்தது உண்மை. இது சிலரால் ஏற்படுத்தப்பட்ட செயற்கைத் தட்டுப்பாடு என்று கூறப்பட்டு வந்ததிலும் உண்மையில்லாமலில்லை. இந்தத் தட்டுப்பாடுகளையும் வேறு சில காரணங்களையும் காரணமாகக் கொண்டுதான் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டதென்று சொல்லப்படுகிறது. ஆனாலும் இந்தக் கிளர்ச்சிகள் வன்முறைச் செயலாக உருவெடுத்துப் பயங்கர இயக்கமாகமாறியதன் விளைவாக முன்பு கூடுதல் விலைக்கும் பெறக்கூடியதாக இருந்த பொருள்கள் இன்று துப்புரவாகக் கிடைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சாதாரண ஏழை எளியமக்களேபெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வெய்யிலிலும் மழையிலும் உண்ண உணவுமின்றி குடிக்கத்தண்ணீருமின்றி 'கியூ'வில் கால்கடுக்க நின்று தொல்லைகள் பலவற்றை அனுபவிக்கின்றனர்.

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் மாமூல் வாழ்க்கை சீர்கெட்டுள்ளதென்பதையும் அரசாங்கம் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக நிலைமை சீரடைந்து வருகிறதென்பதையும் நாட்டுமக்கள் ஒப்புக்கொள்வர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கும், இந்த உணவுப் பொருள்கள்தட்டுப்பாடில்லாமல் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒழுங்காக விநியோகம் செய்வதற்குத் தேவையான பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்கள் விநியோகத்துக்கும் அரசாங்கம் சீரான ஏற்பாடுகள் செய்ய முனைந்து வருவது தெரிந்த விஷயம்தான். ஆனாலும் இந்தப் பொருள்களின் விநியோகத்திலும் விநியோகத்துக்குப் பொறுப்பாக இருப்பவர்களின் செயலிலும், விநியோக முறையிலும் ஒரு சிறு தவறு நேர்ந்தாலும் அதுபெரும் பிரச்னையை உருவாக்கிவிடும்.

அத்தியாவசிய உணவுப்பொருள்களையும் மண்ணெண்ணை, பெட்ரோல் ஆகியவைகளையும் அரசாங்கமே இறக்குமதிசெய்கின்றது. இப்பொருள்களை தனியார்துறையினருக்கு வழங்காமல் பங்கீட்டுமுறையிலும் பர்மிட்டுமுறையிலும் கூட்டுறவுச்சங்கக் கடைகள் மூலம் அல்லது விற்பனவு இலாகா, கூட்டுறவு மொத்த விற்பனவுக்கடைகள் மூலமும் விநியோகம் செய்தால் இப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடமிருக்காததுடன் சகலருக்கும் சமமாகக் கிடைக்கவும் வழி பிறக்கும்.

பங்கீட்டுமுறையில் சீனி வழங்கப்படுகிறது. இதேபோல் மண்ணெண்ணையும்பங்கீட்டுமுறையில் வழங்குவதற்கு யாழ் அரசாங்க அதிபர் யாழ் மாவட்டத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார். கிடைத்ததை வைத்துக்கொண்டு நிலைமையைச் சமாளிப்பதற்குத் தனித்திறமை வேண்டும். இந்த வகையில் யாழ் அரசாங்க அதிபர் பாராட்டுக்குரியவர்.

இதேசமயம் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் விற்பனைக்குப் பொறுப்பானவர்கள் தமது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து செயல்பட வேண்டியது அவசியம். அதேபோல் மண்ணெண்ணையை ஊற்றித் திவைத்தால்தான் அடுப்பு எரியுமென்றும் மண்ணெண்ணை அடுப்பினால் மட்டுந்தான் உணவு சமைக்க முடியுமென்றும் கருதும் சில பெண்களும் நிலைமையை உத்தேசித்து தங்கள் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து செயல்பட வேண்டியதும் இச்சந்தர்ப்பத்தில்தான் மிக அவசியம்.


அத்தியாவசியப் பொருள்கள் பொதுமக்களுக்குக் கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும். அதேசமயம் அவை சகல மக்களுக்கும் சமமாகக் கிடைக்க வழி வகுக்கவேண்டியது இன்றைய நெருக்கடியான கட்டத்தில் பொறுப்பதிகாரிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் உரிய கடமையாகும். அதே நேரத்தில் அத்தியாவசியப் பொருள்களைச் சிக்கனமாக அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பாவிப்பது மக்களுக்குக் குறிப்பாகக் குடும்பப் பெண்களுக்கும் பாவனையாளர்களுக்கும் உள்ள பெரும் பொறுப்பும் கடமையுமாகும் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம்.

## மாவைத் தேர் தீவைப்பு வழக்கு

மாவிட்டபுரம், செவ்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தேர் தீ வைப்பு வழக்கு மல்லாகம் நீதிவான் திரு எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 28-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



### ஐ. நா. கடற்றொழில் ஆலோசகராக நியமனம்

இலங்கை கடற்றொழில் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் திரு. கணபதிப்பிள்ளை சச்சிதானந்தம் ஐக்கியநாடுகள் உணவு விவசாய ஸ்தாபனத்தின் கடற்றொழில் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் விசேடமாக கடல் அட்டை பெருக்கம், பதனிடுதல் சந்தைப்படுத்தல் ஆகியன பற்றிப் பணி புரிவதற்காக சிங்கப்பூர், ஹொங்கொங், நியூகலிடோனியா, நியூகினித்தீவுகள் ஆகிய இடங்களில் கடமையை மேற்கொள்ள இலங்கையிலிருந்து சென்றுள்ளார்.

சியராலியோன்

### குடியரசாகப் பிரகடனம்

ஃப்ரீடவுன், ஏப். 20

சியராலியோன் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான சியராலியோன மூன்று பிரிட்டிஷ் காலனியாக விருந்து விடுதலைபெற்றது.

அரசியல் சாஸனத்திருத்த மசோதா வொன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேறியதைத் தொடர்ந்து சியராலியோன் குடியரசாகியுள்ளது.

### பண நெருக்கடியால் தற்கொலை

திருகோணமலை, செவ்வாய்

ஏழு பிள்ளைகளின் தந்தை ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியினால் சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் சமீபத்தில் திருகோணமலையில் நடைபெற்றுள்ளது. மரணவிசாரணை அதிகாரி திரு. சச்சிதானந்தா நடத்திய மரண விசாரணையின்போது பண நெருக்கடியினால் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரியவந்துள்ளது.

### வேண்டுகோள்

கோட்டை செவ்வாய்

பின்தங்கிய பகுதிகளில் கடமையாற்றும் ஆயுதப் படையினருக்கு வேண்டிய கம்பளி உடைகளைத் தந்துதவுமாறு அரசாங்கம்பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### வீடு தீக்கிரை

மாவிட்டபுரம், செவ்.

சமையல் செய்து கொண்டிருந்த சமயம் தற்செயலாக வீடு தீப்பற்றியதாம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளையின் மனைவியான 75 வயதுள்ள செல்லம்மா என்பவர் சமையல் செய்யும்போது தற்செயலாக வீடு தீப்பற்றியது. தீயை அணைக்க முயற்சி எடுக்கப்பட்டபோதும் பயன் ஏற்படவில்லை. வீடு முழுவதும் தீக்கிரையானதுடன் மூன்று பேருக்கு காயமும் ஏற்பட்டன.

### பிரிட்டிஷ்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இலாகாவின் ஆதரவின்கீழ் நடைபெற்றுவருகிறது. இத்திட்டத்திற்கென பிரிட்டிஷ் ... பொறுப்பு பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்ததாகும்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## 'எதிரி கையில் துவக்கு இருப்பதைக்கண்டேன்'

### கெற்பேலி கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

ஒருதடவை வாடா என்று சத்தம் கேட்டது. அது யாருடைய குரல் என்று நான் மட்டுக்கட்டவில்லை. எந்தவித பேச்சுமில்லாமல் எனக்கு வெடி தீர்ந்தது. இரண்டு அடி எடுத்து வைத்தபின் விழுந்து விட்டேன். எனக்கு ரத்தம் போனது.

கெற்பேலி கொலைமுயற்சி வழக்கில் சாட்சியமளித்த ஆசைப்பிள்ளை பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார். இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் கெற்பேலியில் 70-ம் ஆண்டு ஜனவரி 19-ம் தேதி ஆசைப்பிள்ளை பாலசிங்கம் என்பவரை கட்டுக் கொலைசெய்ய முயற்சித்ததாக செல்லையா கந்தசாமி என்பவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் என். தம்பித்துரை புரக்டர் எஸ். கே. திரவியநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிர்க்காக அரசாங்கத்தால் புரக்டர் வி. யோகேஸ்வரன் நியமிக்கப்பட்டிருந்தார்.

குறுக்கு விசாரணையின் போது சாட்சியமளித்த பாலசிங்கம் கூறியதாவது: 1மணிமுதல் 4 மணிவரை தோட்டத்தில் தேங்காய் பிடுங்கிக்கொண்டிருந்தேன். அப்போது ஒன்றும் நடக்கவில்லை. இரண்டாம் தடவை ஒரு வெடிச்சத்தம் கேட்டது, யார் சுட்டது என்று தெரியாது எதிரியுடன் வந்த 4பேரின் கையிலும் ஆயுதங்கள் இருந்தன. பயத்தினால் என்னென்ன ஆயுதங்கள் என்று கவனிக்கவில்லை. மற்றவர்கள் கையில் துவக்கு இல்லைஎன்பதை நிச்சயமாக கூறுவேன் எதிரி கையில் துவக்கு இருந்ததைக் கண்டேன்.

எதிரியுடன் 4 பேர் நின்றனர் அவர்களைக் கண்டதும் பயந்து விட்டேன் கீழ் கோர்ட்டில் 5 எதிரிகள் இருந்தார்கள். அங்கு இவர் தான் 1-ம் எதிரி.

தான் சம்பவம் நடந்த இடத்தில் விழுந்தபின் என் தகப்பனரை சந்திக்கவில்லை தகப்பனர் பொலிசுடன் வந்தபின்தான் அவர்பொலிசுக்கு போனதாக அறிந்தேன். பொலிசார் வருமட்டும் நான் தகப்பனரைக் காணவில்லை, எதிரிதான்சுட்டார் நான் கண்டனான்

ஜூரிசபையினரின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் சாட்சி கூறியதாவது:

துவக்கைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஒற்றைக்குழல் துவக்குக்கும் இரட்டைக்குழல் துவக்கிற்கும் வித்தியாசம் தெரியாது இரட்டைக்குழல் துவக்கை நான் ஒருநாளும் காணவில்லை நான் துவக்கு பாவிக்கவில்லை.

வேலுப்பிள்ளை பெண் இராஜலட்சுமி சாட்சியமளித்தார் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

டெஸ் கிரிக்கெட்

## இந்தியா வெற்றி; சரித்திர நிகழ்ச்சி!

போர்ட்-ஆவ்-ஸ்பெயின் ஏப். 20

மேற்கிந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் ட்ரினிடாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் இந்திய கோஷ்டி வெற்றி பெற்று ஓர் புதிய சரித்திரத்தை ஏற்படுத்தியது.

மேர்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில் இறுதியாக நடைபெற்ற 5-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டியில் இந்தியாக் கோஷ்டியின் துடுப்படி வீரர் எஸ். ஹவஸ்கார் உலகத் துடுப்படி வீரர்களின் வரிசையில் இடம் பெறும் வகையில் ஓர் புதிய சரித்திரத்தை ஏற்படுத்தினார். இவர் இப்போட்டியில் முதல் இன்னிங்ஸில் 124 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 220 ஓட்டங்களையும் பெற்றார். ஒரே டெஸ்டில் 'மூன்று செஞ்சரிகளை' அடித்த உலகப் புகழ் பெற்ற ஆஸ்திரேலிய வீரர் பிறட்மென், தென் ஆபிரிக்க வீரர் டக்ளஸ் ஆகியோரின் வரிசையில் வீரர் ஹவஸ்காரும் இடம் பெற்று இந்தியாவுக்கு பெரும் புகழ்தேடிக் கொடுத்துள்ளார். 21 வயதுடைய வீரர் ஹவஸ்கார் ஓர் பல்கலைக்கழக மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்தியாக் கோஷ்டிக்கும், இந்தியாக் கோஷ்டிக்குமிடையில் இதுவரை காலமாக நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில் இம்முறை நடைபெற்ற மொத்தம் ஐந்துடெஸ்ட் போட்டிகளில் 2-வது டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. மிகுதி நான்கு டெஸ்ட் போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

5-வது டெஸ்ட் போட்டியின் ஸ்கோர் விபரம்:

இந்தியா: 1-வது இன்னிங்ஸ் 360, 2-வது இன்னிங்ஸ் 427.

மேற்கிந்தியா: 1-வது இன்னிங்ஸ் 526, 2-வது இன்னிங்ஸ் 165—8.

### பேராதனைப் பல்கலைக்கழகம்

கோட்டை, செவ்,

பேராதனைப் பல்கலைக்கழகம் இம்மாதம் 27ந் திகதி திறக்கப்பட மாட்டாதென்றும், மறு அறிவித்தல்வரை மூடப்பட்டிருக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

### சிரமதானம்

அலுத்கம. செவ்வாய்

பலவருடங்களாகப் பழுதடைந்த நிலையில் இருந்த இரண்டு பஸ்வண்டிகளை அலுத்கம இ. போ. ச. டிப்போ ஊழியர்கள் டிப்போ பொறியியலாளர் தலைமையில் சிரமதான மூலம் திருத்தி சேவைக்கு விட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org